**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 31 January 2017

# உலக தரவரிசைப் பட்டியலில் சிங்கப்பூரின் வணிகப்படிப்பு கல்வி நிலையங்கள் மேம்பாடு

உலகப் புகழ் பெற்ற ஃபைனான்ஷியல் டைம்ஸ் வருடாந்திர எம்பிஏ படிப்பு உலகத்தர குறியீட்டில் சிங்கப்பூரின் தலைசிறந்த உயர்கல்வி நிலையங்கள் முன்னிலும் சிறந்த இடங்களைப் பெற்று இருக்கின்றன. நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் நன்யாங் வணிகத் துறைப் பள்ளி அந்த குறியீட்டில் 24வது இடத்தில் இருக்கிறது. அது சென்ற ஆண்டு 29வது இடத்தில் இருந்தது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் வணிகப் படிப்புப் பள்ளி 26வது இடத்தில் இருக்கிறது. இது முந்தைய ஆண்டில் 32வது இடத்தில் இருந்தது.

இன்சாட் வணிகப் படிப்புப் பள்ளியே தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக உலகின் தலைசிறந்த பள்ளியாகத் திகழ்ந்து வருகிறது. அந்த உயர்கல்வி நிலையம் பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இரண்டு கல்வி வளாகங்களைக் கொண்டிருக்கிறது. பரந்த அளவிலான முன்னாள் மாணவர்களின் கட்டமைப்பு அந்தக் கல்வி நிலையத்திற்கு மிகவும் பலமிக்க ஒன்றாகத் திகழ்கிறது.

ஸ்டாண்டர்டு வர்த்தகப் பட்டப்படிப்பு கல்வி நிலையம் ஐந்தாவது இடத்திலிருந்து இரண்டாவது இடத்திற்கு மேம்பட்டு இருக்கிறது. பென்சில்வேனியா வார்ட்டன் பல்கலைக்கழகப் பள்ளி நான்காவது இடத்திலிருந்து மூன்றாவது இடத்திற்கு மேம்பட்டு இருக்கிறது.

செலவிடும் பணத்திற்கு உரிய மதிப்பைப் பொறுத்த வரையில் உலகளவில் நன்யாங் வணிகப் படிப்புப் பள்ளி 26வது இடத்திலும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக வணிகப் படிப்புப் பள்ளி 33வது இடத்திலும் இருக்கின்றன.

புகழ்பெற்ற பல பள்ளிக்கூடங்களும் இந்த ஆண்டு பட்டியலில் பின்தங்கிவிட்டன.

ஹார்வர்ட் வணிகப் பள்ளி ஒன்பது ஆண்டுகளில் இல்லாத படி இரண்டு இடங்கள் இறங்கி நான்காவது இடத்திற்குப் போய் விட்டது. லண்டன் வணிகப் பள்ளி மூன்று இடங்கள் இறங்கி ஆறாவது இடத்திற்கு வந்து விட்டது. கடந்த 14 ஆண்டுகளில் இத்தகைய நிலை இந்த உயர் கல்வி நிலையத்திற்கு ஏற்பட்டதில்லை.

உலகளவில் புகழ்பெற்ற வணிகத்துறை கல்வி நிலையங்களையும் அந்த நிலையங்களின் 2013ஆம் ஆண்டின் பட்டதாரிகளையும் உள்ளடக்கிய ஆய்வுகளின் அடிப்படையில் ஃபைனான்ஷியல் டைம்ஸ் அட்டவணை உருவாக்கப்படுகிறது.

இந்தக் கல்வி நிலையங்களைச் சேர்ந்த முன்னாள் மாணவர்களின் வாழ்க்கைத் தொழில் மேம்பாடு, மாணவர்கள், கல்வித் துறைகளின் பன்முகத்தன்மை முதலானவற்றின் அடிப்படையில் எம்பிஏ பாடத்திட்டங்கள் மதிப்பிடப்படுகின்றன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.